கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com

தலைவர்:- உயர்திரு க.அரியரத்தினம். 07823535094

சித்திரை மாத இதழ்
NEWS BULLETIN
APRIL 2021
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
12/09/20 முதல்	புதிய தவணைக்கான தமிழ்ப்பாட, கலைப்பாட வகுப்புகள் Zoom செயலி மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தவணையும், ஆசிரிய வேதனத்துக்காகத் தவணைக்கு £25 அல்லது ஒரு வருடத்திற்கு (மூன்று தவணைகள்) £70 அறவிடப்படுகிறது. கலைப்பாட ஆசிரியர்களின் தொடர்புகளுக்கு கர்நாடக சங்கீதம் திரு.தீனதயாளன் 07886969194 திருமதி.வானதி 07523431759 பரதநாட்டியம் திருமதி சத்தியகௌரி 07773591591 திருமதி அஜந்தா 07425577697 மிருதங்கம் - செல்வன்.தனுஜன் 07582418364 வீணை - செல்வி.சாத்விகா 07556130208 மேலும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள திருமதி பொன்மணி 07436542925 அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.
02/05/21	தமிழ்த் தினப் போட்டிகள்
26/05/21	பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையினர் நடாத்தும் இணையவழித் தமிழ் மொழிப் பரீட்சை

பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் தமிழ்மொழிப் பரீட்சை 2021

தற்போதுள்ள நெருக்கடி நிலைமையைக் கருத்தில் கொண்டு, மிகக் கவனமான ஒரு கருதுகோளின் அடிப்படையில், பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையானது, இந்த வருடத்துக்கான தமிழ் மொழிப் பரீட்சையினை எதிர்வரும் 26/06/2021 அன்று இணைய வழிமூலம் நடாத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது.

பேசுதல்(Speaking) பரீட்சையானது வைகாசிமாத இறுதி வாரத்தில் ஆரம்பமாகும். பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் இந்தப் பரீட்சைகளின் விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி 15/05/2021. பரீட்சைக்கான விண்ணப்பங்களை www.bteb.org.uk என்ற இணையத்தளம் மூலமும் விண்ணப்பிக்கலாம்.

இப்பரீட்சைகள் இணையத்தளம் மூலமே நடைபெறுவதால், விண்ணப்பித்தோருக்கான user name and password பெற்றோருக்கு அனுப்பி வைக்கப்படும். பெற்றோருக்காக வடிவமைக்கப்பட்டுள்ள பிரத்தியேக இணையக் கணக்கினுள் நுழைவதன் மூலம் பரீட்சைக்குரிய வினாத்தாள்களைப் பரீட்சை அன்று தரவிறக்கம்(Download) செய்து மாணவர்களுக்கு வழங்க முடியும். பரீட்சை முடிந்த பின்னர் விடைத்தாள்களை Scan பண்ணுவதன் மூலம் மீள அனுப்ப முடியும். இதற்கான நேரமும் வழங்கப்படும்.

ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் இருப்பின், அவர்களுக்கு ஒரு கணக்கிலக்கமே வழங்கப்படும். தமிழ்ப் பாடசாலையானது இதற்குப் பொறுப்பாக இருந்து, பெற்றோர் தங்களுடைய பிரத்தியேகக் கணக்கினுள் நுழைவதற்கு அனுமதி வழங்கும்.

மேலதிக விபரங்களுக்குத் தமிழ்ப் பாடசாலையைத் தொடர்பு கொள்ளவும்.

கட்டண விபரங்கள்

தமிழ்மொழிப் பரீட்சையானது நான்கு திறன்களிலும் நடைபெறும். அவையாவன

1.பேசுதல் (Speaking)

2.கேட்டல் (Listening)

3.வாசித்தல்(Reading)


4.எழுதுதல்(Writing)

ஆரம்ப நிலை மற்றும் பாலர் வகுப்புகளுக்கு ஒரு திறனுக்கு £3உம் எல்லாத் திறன்களுக்கும் £10உம் அறவிடப்படும்.

ஏனைய வகுப்புகளுக்கு ஒரு திறனுக்கு £5உம் எல்லாத் திறன்களுக்கும் £10உம் அறவிடப்படும்.






கிளி

கிளி மிகவும் அழகான பறவை.

கிளிகளுள் பலவகை உண்டு.

பச்சை வர்ணக் கிளிகளை நாம் எங்கும் காணலாம்.

கிளியின் கழுத்தில் வட்டமான ஆரம் உண்டு.

பல வர்ணங்கள் உள்ள கிளியைப் பஞ்சவர்ணக் கிளி என்பர்.

பச்சைக் கிளியின் அலகு கிழ்ப்பாய் இருக்கும்.

கிளி பழங்கள், விதைகள், தானியங்கள் முதலியவற்றை தின்னும்.

பஞ்சவர்ணக் கிளியின் அலகு மஞ்சளாய் இருக்கும்.

கிளி மரப்பொந்துகளில் வாழும்.

சிலர் கிளியைப் பிடித்துக் கூண்டில் அடைத்து வளர்ப்பர்.

கிளிக்குப் பேசப் பழக்கலாம். அது நாம் சொன்னதைச் சொல்லும்.

சொன்னதைச் சொல்லுமாம கிளிப்பிள்ளை என்பது பழமொழி.

லக்ஸ்மிதா
உருத்திரன் தரம்-4

சித்திரையில் தமிழ்ப் புத்தாண்டு

தமிழ் நாட்காட்டி இராசிச்சக்கரத்தைக் காலக்கணிப்பில் பயன்படுத்தும் ஒரு சூரிய நாட்காட்டி என்பதால், பன்னிரு இராசிகளில் முதல் இராசியான மேடத்தில் சூரியன் நுழையும் சித்திரையே முதல் மாதமாகக் கருதப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. சங்க இலக்கியமான நெடுநல்வாடையில் மேடமே முதல் இராசி என்ற குறிப்புக் காணப்படுவதால், அதை மேலதிக சான்றாகக் கொள்வர். எனினும், பத்தாம் நூற்றாண்டுக்குப் பிந்திய *அகத்தியர் பன்னீராயிரம்*, பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த *புட்பவிதி* முதலான நூல்களே தெளிவாகச் சித்திரை முதல் மாதம் என்று சொல்கின்றன. பங்குனியின் இறுதிநாட்களில் அல்லது சித்திரை முதல் நாளில் தான் வழக்கமாக வேங்கை மரம் பூக்கும். மலைபடுகடாம் "தலைநாள் பூத்த பொன் இணர் வேங்கை" என்றும், பழமொழி நானூறு "கணிவேங்கை நன்னாளே நாடி மலர்தலால்" என்றும் பாடுவதால் இளவேனில் துவக்கமான சித்திரையே அக்காலத்தில் தலைநாளாக மிளிர்ந்தது என்றும் சொல்கிறார்கள்.

இலங்கையில் தமிழரும், சிங்களவரும் சித்திரை ஒன்றையே புத்தாண்டாகக் கொண்டாடுகிறார்கள். மேலும், இலங்கையின் திருக்கோணேச்சரம், 1622ஆமாண்டு சித்திரை மாதம், தமிழர் புத்தாண்டு அன்று கொள்ளையிடப்பட்டதாகப் போர்த்துக்கீசர் குறிப்புகள் சொல்வதாகவும் அறியப்படுகின்றது. (இணையத்தில் இருந்து)

சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டே!

மானிடர் மனங்கள் செழிக்க
மலர்ந்த தமிழ்ப் புத்தாண்டே
இறைநம்பிக்கை நீரூற்றினை
இல்லமெல்லாம் நடமாட விடு!

மனிதம் போற்றும் புனிதர்களை
தமிழர் வாழ்வில் மலரச் செய்!
அன்பில் திளைக்கும் உறவுகளை
அகிலத்தில் உருவாக்கிக் கொடு!

மதியழகில் மகுடம் சூடியே
மதபேதங்கள் ஒழியச் செய்!
மழலையர் பாலர் மகிழ்ந்திடவே
சுடர்மிகு தமிழை அறியச் செய்!

தாயகங்களில் நோய் அகலவே
தரணியில் உயிர்கள் வாழ்ந்திடவே
தலைவர்கள் மாந்தரைக் காத்திடவே
தமிழ்ப் புத்தாண்டே வரங்கொடு!

மண்ணில் விதைகள் முளைத்திடவே
வானம் மழை பொழிந்திடவே
வளமாய்த் தொழில்கள் அமைந்திடவே
நாடெங்கும் நித்தம் நலம் கூட்டிடு!

சித்திரையில் மலர்ந்த புத்தாண்டே
சிந்தையில் அறிவொளி பெருக்கிடு!
கொரோனா விலகிட அருள் கொடு!
பல்லாண்டு வாழ ஈசனை வணங்கிடு!
எல்லோரும் வாழ ஆசி வழங்கிடு!

நன்றி
திருமதி. அனற் செபமலர்
தமிழாசிரியை

